**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**அசல் வழக்கு எண் - 164/2022**

**வாதி தரப்பு சாட்சி-1 குமரன் - திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கி**ளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 04.07.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>:**

1) நான் வழக்கறிஞராக திருச்சியில் 2016 முதல் பணிபுரிந்து வருகிறேன் என்றால் சரிதான். எனக்கு திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கம் வட்டம் புங்கனூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். அ.வ.எண். 164/2022 எந்த சொத்தை பொறுத்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சர்வே எண் 112/1 ஏ 4 பொறுத்து தாக்கல் செய்தேன். என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன் என்றால், பிரதிவாதிகள் எனது சுவாதீனத்திற்கு இடையூறு செய்யக்கூடாது என கேட்டுள்ளேன். தாவா சொத்து எவ்வகை நிலம் என்றால் மானாவாரி புஞ்சை நிலம் ஆகும். தாவா சொத்து குறித்து நான் என்ன ஆவணம் வைத்துள்ளேன் என்றால் உஷாராணி என்பவரிடம் இருந்து நான் கிரையம் பெற்றுள்ளேன். உஷாராணி எனக்கு என்ன உறவு என்றால், எங்கள் ஊரைச் சேர்ந்தவர், அவர் எனது சமூகத்தை சேர்ந்தவர் என்பதால் உறவினர். உஷாராணி தற்போது ஊரில் இருக்கிறார் என்றால் இருக்கிறார். உஷாராணி தற்போது என்னுடன் சுமூக உறவில்தான் இருக்கிறார் என்றால் சரிதான்.

2) பொதுவாக ஒரு சொத்தை கிரையம் பெறும்போது அந்த சொத்தை பொறுத்து அதற்கு உரிமை ஆவணங்கள் மற்றும் வில்லங்கம் அனைத்தையும் பார்த்து கிரையம் பெறவேண்டியது கிரையம் பெறுபவரின் பொறுப்பு என்பது எனக்கு தெரியும் என்றால் சரிதான். கிரையம் பெறுபவர் வருவாய்துறை ஆவணங்களின் பதிவுகளை பார்த்து கிரையம் பெறவேண்டும் என்றால் சரிதான். நான் உஷாராணியிடம் இருந்து கிரையம் பெற்றபோது தாவா சொத்தில் வருவாய்துறை ஆவணங்கள் அனைத்தையும் பார்த்துதான் கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். ஒரு சொத்தின் பட்டா யார் பெயருக்கு உள்ளதோ அந்த நபர்தான் அந்த சொத்தை உரிமை மாற்றம் செய்ய முடியும் என்றால் சரிதான். நான் கிரையம் பெற்றபோது உஷாராணி பெயரில் பட்டா இருந்ததா என பார்த்துதான் கிரையம் வாங்கினேனா என்றால் இல்லை.

3) கிரையம் பெற்றபோது தாவா சொத்திற்கான பட்டாவை பார்த்தேனா என்றால் பார்த்தேன். யார் பெயரில் பட்டா இருந்தது என்றால் 2 நபர்கள் பெயரில் இருந்தது, அவர்கள் பெயர் ஞாபகம் இல்லை. மேற்படி 2 நபர்களில் உஷாராணி பெயர் இருந்ததா என்றால் இல்லை, உஷாராணி, சிவக்குமார் என்பவரின் பொது அதிகார முகவராக இருந்து எனக்கு கிரையம் செய்து கொடுத்தார். சிவக்குமார் பெயராவது பட்டாவில் இருந்ததா என்றால் ஞாபகமில்லை. நான் தாவா சொத்தை கிரையம் பெற்ற தேதி என்ன என்றால் 01.08.2022 ஆகும். தாவா சொத்தின் தற்போதைய பட்டாதாரர் யார் என்றால் ஞாபகமில்லை.

(வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி

**Principal District Munsif,**

**Kulithalai.**